**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்</u>**

<u>அசல் வழக்கு எண். 57/2020</u>

**<u>DW2</u>**

இந்நீதிமன்ற எழுத்தர் திரு.தேவகி, Grade III Bench Clerk என்பவரால் முறையோடு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு pபவாதி தரப்பில் 1 ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875 ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 07–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர். திரு.முத்துக்குமார்<br>வயது. | நாள்.07.11.2025 |
| த/பெ. திரு.மகாதேவன் | தொழில் |
| கிராமம் | வட்டம், |

<u>பி.வா.சா.2 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்.</u>

1. நான் இந்த வழக்கில் 4ம் பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலம் நான் சொல்லி தான் தயாரிக்கப்பட்டது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள விவரங்கள் உண்மையானது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

*2.10.03.2011* தேதியிட்ட தான செட்டில்மண்ட் ஆவணம் அசல் பி.வா.சா.ஆ. *4* ஆக குறியீடு செய்யப்படுகிறது.

*3.* என்னுடைய அம்மா பட்டா மாறுதல் கோரி கொடுத்த மனு **பி.வா.சா.ஆ.** ***5*** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

*4.* அசல் அஞ்சல் ஒப்புகை அட்டை **பி.வா.சா.ஆ.*6* ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

***5.*** **என்** அம்மா சூனாம்பேடு காவல் நிலையத்தில் அளித்த *23.07.2014* தேதியிட் ட புகார் மனுவின் நகல் **பி.வா.சா.ஆ.*7* ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

*6. 23.07.2014* அன்று சூனாம்பேடு காவல் நிலையத்தில் வழங்கிய புகார் ஏற்பு ரசீது **பி.வா.சா.ஆ.*8* ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

*7.* வழக்கு சொத்தின் புகைப்படம் *(7* வரிசை*)* சி.டி. மற்றும் இந்திய சாட்சிய சட்டத்தின் பிரிவு *65* ன் கீழ் சான்றிதழ் **பி.வா.சா.ஆ *9* ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**பி.வா.சா.ஆ.*4* மோசடியான ஆவணம் என்று *5* முதல் *9* வழக்குக்கு பிறகு உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்று வாதி தரப்பில் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Tmt.N.Valliamma.,
DM Cum JM
Cheyyur (FAC)